தேசிய வகை பாகன் செராய் தமிழ்ப்பள்ளி

கணிதம் நாள் பாடத்திட்டம் ஆண்டு 4

தேதி : 14.07.2021 **கிழமை : புதன்**

மதிப்பீடு : விழுக்காடு தொடர்பான பிரச்சனைக் கணக்குகளை அறிவோம்

எடுத்துக்காட்டு :-

ஒரு கூடையில் மொத்தம் 50 ஆரஞ்சுப் பழங்களும் ஆப்பிள் பழங்களும் இருந்தன. அவற்றுள் 30 ஆப்பிள் பழங்கள் இருந்தன. ஆப்பிள் பழங்களின் விழுக்காட்டைக் கணக்கிடுக.

கொடுக்கப்பட்டது	50 ஆரஞ்சு மற்றும் ஆப்பிள் பழங்கள் 30 ஆப்பிள் பழங்கள்
கேட்கப்பட்டது	ஆப்பிள் பழங்களின் விழுக்காடு
செய்முறை	பின்னம் உருவாக்கி, 100% ஆல் பெருக்கல்
தீர்வு	$\frac{30}{50} \times 100\% =$ ____ %

$\frac{30}{50} \times 100 = 60\%$

சரி பார்த்தல்

$\frac{20}{50} \times 100\% = 40\%$

$= 100\% - 40\%$

$= 60\%$



விழுக்காடு = $\frac{\text{எண்ணிக்கை}}{\text{மொத்தம்}} \times 100\%$

1. படம், ஒரு தென்னந்தோப்பில் சேகரிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையைக் காட்டுகிறது. திரு. மாறன் அந்தத் தேங்காய்களிலிருந்து 30ஐ தம் வீட்டிற்குப் பயன்படுத்தினார். எஞ்சிய தேங்காய்களில் 45 தேங்காய்களை அண்டை வீட்டாருக்கு விற்றுவிட்டார். மீதமிருந்த தேங்காய்களை உணவுக் கடைகளுக்கு விற்றுவிட்டார். உணவுக் கடைகளுக்கு விற்ற தேங்காய்களின் விழுக்காட்டைக் கணக்கிடுக.

150 தேங்காய்கள்

விடை=

2. ஒரு பள்ளியில் 40 பேர் சுற்றுலா சென்றனர். அவர்களில் 8 பேர் ஆசிரியர்கள் ஆவர். மற்றவர்கள் மாணவர்கள். மாணவர்களின் விழுக்காட்டைக் கணக்கிடுக.

விடை=

LIVEWORKSHEETS